**<u>வேலூர் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்</u>**

**<u>ந.க.எண்.2885/அ4/2022 நாள். -11-2022</u>**

பொருள் : பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – மிதிவண்டிகள் வழங்கும் திட்டம் – 2022–2023 ஆம் கல்வியாண்டு – 11 ஆம் வகுப்பு பயிலும் அனைத்து இன மாணவ / மாணவிகளுக்கு மிதிவண்டிகள் இறுதி தேவை பட்டியல் மற்றும் 2021–2022 ஆம் கல்வியாண்டில் 11 ஆம் வகுப்பு பயின்ற மாணவர்களுக்கு பெற்று வழங்கியதில் இருப்பு மற்றும் தேவை பட்டியல் கோருதல் – சார்பு

பார்வை : தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரக இணை இயக்குநரின் (தொழிற்கல்வி) செயல்முறைகள் ந.க.எண்.040736/இ/இ1/2022 நாள்.17.11.2022

----

பார்வையில் காண் செயல்முறை கடிதப்படி தமிழக அரசின் மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் **2022–2023 ஆம் கல்வியாண்டில் 11ஆம் வகுப்பு பயின்று வரும்** மாணவர்களுக்கு (SC/ST/MBC&DNC/BC/OC) விலையில்லா மிதிவண்டிகள் வழங்குதல் சார்ந்து இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவம் 1ல் சரியான விவரங்களை பூர்த்தி செய்து அளிக்கப்பட வேண்டும்.

**2021–2022 ஆம் கல்வியாண்டில் 11 ஆம் வகுப்பு பயின்ற மாணவர்களுக்கு** பெற்றது, வழங்கப்பட்டது , இருப்பு மற்றும் தேவை பட்டியல் படிவம் 2 மற்றும் 3ல் மிக சரியாக பூர்த்தி செய்து சரிபார்த்து அளிக்கப்பட வேண்டும்.

மேற்காணும் விவரங்களை சார்ந்த தலைமையாசிரியர்கள் கையொப்பமிட்டு முகப்பு கடிதத்துடன் 19.11.2022 அன்று காலை 11.00 மணிக்குள் முதன்மைக் கல்வி அலுவலக அ4 பிரிவில் நேரடியாக தனிநபர் மூலம் சமர்ப்பிக்குமாறு அனைத்து அரசு / நகராட்சி / நிதியுதவி / பகுதி நிதியுதவி மற்றும் ஆதிதிராவிட நல மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இதில் ஏதேனும் தவறு ஏற்படின் சம்மந்தப்பட்ட தலைமையாசிரியரே முழு பொறுப்பு ஏற்க நேரிடும் என திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு

படிவம் 1,2,3

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

18.11.22

பெறுநர்

அனைத்து அரசு / நகராட்சி / நிதியுதவி / பகுதி நிதியுதவி மற்றும் ஆதிதிராவிட நல மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் , வேலூர் மாவட்டம்